நாள்: **22.03.2024**

**O.S. No. 60/2022**

**வா.சா.1**

**பெயர்: ராமச்சந்திரன், த/பெ. வெங்கடாச்சலம்**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :**

தாவாவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் சுமார் 15 வருட காலமாக குடியிருந்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள் மற்றும் ஒரு மகள். நானும், எனது மகன்களும் ஒன்றாகத்தான் வசித்து வருகிறோம். எனது மகள் திருமணம் செய்து வெளியூரில் வசித்து வருகிறார். தாவா சொத்து 16.06.1990 ல் தமிழ்செல்வி என்பவரிடமிருந்து வாங்கினேன். தாவா சொத்தை அளவீடு செய்து வாங்கினீர்களா என்றால் இல்லை. 2006 லிருந்து தாவா சொத்தில் சாகுபடி செய்து வருகிறேன். நான் தான் நேரடியாக விவசாயம் செய்து வருகிறேன். அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் கிராம நிர்வாக அலுவலர் சான்றில் எனது மகள் சாகுபடி செய்வதாக கண்டுள்ளது. கடந்த 19.09.2022 ம் தேதி வழங்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் சான்று எனது மகன் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது. நான் கிரயம் பெற்ற பத்திரத்திலும், பட்டாவிலும் விஸ்தீரணம் மாறுபட்டுள்ளது என்றாலும், பத்திரத்தை விட பட்டாவில் குறைவாக காட்டப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு இதுவரை தெரியவில்லை. நான் நேரடியாக சாகுபடி செய்திருந்தால் தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரிந்திருக்கும் என்றாலும், நான் சாகுபடி செய்யாத காரணத்தினால் தான் விஸ்தீரணம் தெரியவில்லை என்றால் சரியல்ல. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 37 செண்ட் மற்றும் 27 செண்ட் ஆகியவற்றிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு சொத்துக்களுக்கு எதுவும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்படி தாவா 1வது, 2 வது அயிட்ட சொத்திற்கு கிரயப்பத்திரம் மட்டுமே தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

மற்ற கிராம கணக்குகளின் ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளேன். நாளது தேதியில் யார் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் நாங்கள் சாகுபடி செய்து வருகிறோம். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் உழவு பணி மேற்கொண்டபோது பிரதிவாதி தடுத்தார். அதன்பேரில் நான் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். 2005 ம் ஆண்டு குடும்பத்திற்குள் பாகம் ஏற்பட்டது என்றால் சரிதான். 2006 ம் ஆண்டு தாவா 2 வது அயிட்ட சொத்தை கிரயம் பெற்றேன். தாவா 2 வது அயிட்ட சொத்தை நான் கிரயம் பெறுவதற்கு முன்பாகவரை எங்கள் குடும்பத்தில் கூட்டு அனுபவமாக இருந்து வந்தது என்றால் இல்லை. எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே சொத்தை மாற்றி அனுபவம் செய்து வந்தார்கள். தாவா 2 வது அயிட்ட சொத்தை எனது அண்ணன் கண்ணன் இறந்தபிறகு அவரது மனைவிக்கு என்று குறிப்பிட்டு தான் குடும்ப பாகபிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்றால் ராமன் பெயரில் உள்ள சொத்தை பொறுத்து தான் அவ்வாறு எழுதப்பட்டது. ஏற்கனவே குடும்ப பாகபிரிவினை ஏற்பட்டது தெரிந்து கொண்டு 2006 ம் வருடம் தமிழ்செல்வி மூலமாக 2 வது அயிட்ட சொத்தை கிரயம் பெற்றதாக சொல்லி பொய் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பிரச்சனை செய்தது சம்மந்தமாக காவல்நிலையத்தில் அளித்த புகார் சம்மந்தமாக ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நாளது தேதிவரை தாவா சொத்துக்கள் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும், எனக்கு சொந்தமானது என்றும், பிரதிவாதி பிரச்சனை செய்தார் என்றும், அதன் காரணமாக அவர்மீது காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் மற்றும் மகள் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுகள் நகைக்கடனுக்காக பெறப்பட்டது என்றால் இல்லை. நான் நேரடியாக சாகுபடி செய்திருந்தால் சரியான அளவுகள் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும், அவ்வாறு சாகுபடி

செய்யாததன் காரணமாகத்தான் அளவுகள் சரிவர குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

ஒம் / - S. விஜய் ஆனந்த்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.